DVC.No. 03/2025
Date: 21.01.2026
PW-1 ஷர்மிளா, த/பெ. சரவணன்

**<u>குறுக்குவிசாரணை</u>**

1ம் எதிர்மனுதாரரான செல்லக்குமாருக்கு தம்பி ரமன்கிஷோர் என்பவர் உள்ளார் என்றால் சரிதான். அவருக்கு பார்வை குறைபாடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரமன்கிஷோர் கல்லூரியில் படித்து வருகிறார் என்றால் சரிதான். 04.12.2022ம் தேதி எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இந்து முறைப்படி திருமணம் நடைப்பெற்றது என்றால் சரிதான். மேற்படி பெண்பார்ப்பதற்கு எதிர்மனுதாரர் யார் மூலமாக எங்கள் குடும்பத்தை அனுகினார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது எனது அப்பாவிற்கு தெரியும். எங்க ஊரில் இருந்து துளசி என்பவரை எதிர்மனுதாரர் ஊரில் கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி துளசி என்பவர் எங்கள் வீட்டின் அருகே தான் வசித்து வருகிறார் அந்த துளசி மூலமாகத்தான் எதிர்மனுதாரர் என்னை பெண் கேட்டு வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி எதிர்மனுதாரர் என்னை பெண் கேட்டு வரும்போது எதிர்மனுதாரருடன் அவரது தாத்தா மற்றும் மாமாவான மணிகண்டனும் வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி மூவரும் திருமணத்திற்கு முன்பே மேற்படி முதல் திருமணம் நடந்தது பற்றியும் அந்த திருமணம் முறிந்துவிட்டதாக சொல்லி மணமுறிவு பத்திரத்தையும் என்னிடமும் என் பெற்றோரிடமும் காண்பித்தார்கள் என்றால் சரியல்ல. எனது பெற்றோர்கள் மேற்படி எதிர்மனுதாரரின் பெயரில் உள்ள வீட்டினை எனது பெயருக்கு மாற்றி எழுதினால்தான் பெண் கொடுப்பேன் என்று சொல்லிவிட்டார்கள் என்றால் சரியல்ல. வீட்டினை எழுதி கேட்டதால் 1ம் எதிர்மனுதாரரின் குடும்பம் என்னை திருமணம் செய்யவேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள் என்றால் சரியல்ல. பின்னர் எனது பெற்றோர்களே முன் வந்து 7 மாதத்திற்கு பிறகு பெண் கொடுக்கிறோம் என்று சொல்லி 1ம் எதிர்மனுதாரர் குடும்பத்தை அனுகினார்கள் என்றால் 1ம் எதிர்மனுதாரர் என்னை பெண் கேட்டு வரும்போது எனக்கு 18 வயது பூர்த்தியடையவில்லை அதனால் பெண் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டார். அதன் பின்னர் எனக்கு 18 வயது பூர்த்தியடைந்தவுடன் 1ம் எதிர் மனுதாரர் வந்து பெண் கேட்டபோது பெண் கொடுக்க

சம்மதித்துவிட்டார்கள் என்றால் சரிதான். என்னை திருமணம் செய்து கொடுப்பதற்கு முன்பு 1ம் எதிர்மனுதாரர் பற்றி எனது தகப்பனார் விசாரித்தாரா இல்லையா என்றால் விசாரித்தார்கள். யாரிடம் 1ம் எதிர்மனுதாரரைப் பற்றி விசாரித்தார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் எனது தகப்பனாருக்குத்தான் தெரியும். எனது பெற்றோர்களுக்கு நல்லவிதமாக 1ம் எதிர்மனுதாரரைப் பற்றி தெரிந்ததால்தான் பெண் கொடுத்தார்கள் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் என்ன உத்தியோகம் செய்கிறார் என்று தெரிந்துகொண்டேன் என்றால் வெளிநாட்டில் வேலை செய்து வந்து பஸ்டிப்போவில் வேலைக்கு எழுதிப்போட்டதாக என்னிடம் சொன்னார்கள். மேற்படி 1ம் எதிர்மனுதாரருக்கு பஸ்டிப்போவில் வேலை வரும் என்றும், அதுவரையில் தகப்பனாரின் கடையில் வேலை செய்கிறார் என்று சொன்னதால்தான் என்னை 1ம் எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்துவைத்தார்கள். எனது அப்பா முன்னாள் ராணுவ வீரர் என்றால் சரிதான். ஒரு அரசு வேலை வாங்கவேண்டும் என்றால் தேர்வு எழுதி தேர்ச்சிபெற்றால் தான் வரும் விண்ணப்பித்தால்தான் வரும் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் அவர் எந்தவொரு வேலைக்கும் விண்ணப்பிக்கவில்லை அவரது தகப்பனார் தொழிலான சலவைத் தொழில்தான் செய்து வந்தார் அந்தத் தொழிலை சொல்லித்தான் திருமணம் செய்தார் என்றால் சரியல்ல. அரசு வேலைக்கு எழுதிப்போட்டார் என்ற விவரங்களை நான் மனுவிலும், முதல் விசாரணையிலும் சொல்லலவில்லை என்றால் யாரும் என்னை கேட்கவில்லை நான் சொல்லவில்லை.

(குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்